**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 196/2014** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : | P.கல்யாணி | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused 1, 2 absent. Petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2024

---

**முதல் விசாரணை:**

நான் எ.ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் மற்றும் எதிரிகளை எனக்கு தெரியும். புகார்தாரர் கோதண்டனும், எதிரி ஜெகன்ராம் என்பவரும் உடன் பிறந்த சகோதரர்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்தது. அன்றைய தினம் காலை 11.30 முதல் 12 மணியளவில் நான் சம்பவ இடத்தில் இருந்த போது புகார்தாரருக்கும், எதிரிக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இருவருக்கும் அடிக்கடி சண்டை வருவதுண்டு. பின்பு சமாதானமாகிவிடுவார்கள். அன்றைய தின தகராறில் கோதண்டனுக்கு நெஞ்சில் ஊமைக் காயம் ஏற்பட்டது. ஜெகன்ராமனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அருகில் ஆட்கள் கூடியிருந்தார்கள். நான் எதிரியையும், புகார்தாரரையும் விலக்கி விட்டேன். பின்னர் இருவரையும் சாட்சிகளுடன் சேர்ந்து நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். கோதண்டன் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில்சுமார் 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். ஜெகன்ராமன் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் ஒரு மாதகாலம் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சண்டை ஏற்பட்ட சமயத்தில் கோதண்டனும் அவரது மனைவியும் இருந்தார்கள். கோதண்டன், அவரது மனைவி அடித்ததில் ஜெகன் ராமனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஜெகன்ராமன் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கோதண்டன் மற்றும் குடும்பத்தினர் வாய்தாவிற்கு வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு போய் தான் சம்பவத்தை பார்த்தேன். ஜெகன்ராமன் என்பவரின் அம்மா ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்து வீடு

கட்டினார்கள். அந்த வீட்டை இடித்ததால் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். கோதண்டன் மற்றும் குடும்பத்தினர் தாக்கியதில் ஜெகன்ராமனுக்கு காயம் ஏற்பட்டது என்றும் ஜெகன்ராமனை தாக்கிய போது கீழே விழுந்ததில் கோதண்டனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் இருவரும் மல்லுக்கட்டிக் கொண்டார்கள். கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி கோதண்டன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./P.Kalyani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.